இதழ் 02

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

# தமிழ்க் கதிர்



மாணவர் சஞ்சிகை – டிசம்பர் 2024 | www.tsch.org.au



## தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

# ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலைய அதிபரின் வாழ்த்துச் செய்தி

**'தமிழ்க்கதிர்'** என்ற புதுப்பெயருடன் சென்ற ஆண்டு மலர்ந்து மணம் பரப்பிய மாணவர் சஞ்சிகையானது இவ்வருடத்துக்காக 2024 இறுதியில் ஒளி பரப்பி வெளிவருவது மகிழ்ச்சியான விடயமாகும்.

இம் முறை தமிழ்க்கதிரானது பெருந்தொகையான மாணவர்களின் எழுத்து ஆக்கங்களையும் வரை படங்களையும் தாங்கிப் பேருருவில் வெளிவருகிறது. பாலர் வகுப்பு முதல் உயர்தரவகுப்பு வரை அனைத்து வகுப்புகளிலிருந்தும் பங்கு கொள்ளக் கூடிய அனைத்து மாணவர்களினது பலதரப்பட்ட ஆக்கங்களையும் தாங்கி அலங்காரமாக இணைய மின்னிதழாகத் தமிழ்க்கதிர் உங்கள் பார்வைக்கு வருகிறது. கையெழுத்துப் பிரதியாக ஆரம்பித்த கதிர் சஞ்சிகை இம்முறை இணையத்தில் மட்டுமல்லாது (Mobile app) கைப்பேசிச் செயலியிலும் பார்க்கக் கூடியதாக வெகு விரைவில் வெளிவரவிருப்பது மகிழ்ச்சியான விடயமாகும்.

எழுத்து என்பது மனிதனின் மகத்தான படைப்பு. போர் ஆயுதங்களை விடவும் எழுத்து வலிமையானது என்றார் லெனின். அந்த வகையில் மாணவர்களது மொழி அறிவை வலிமையாக்க, சிந்தனை வளத்தை வலிமையாக்க எழுத்து உதவும். இங்கே மாணவர்களின் சுயமாக எழுதும் திறனை வளர்க்கவும் அதனை மேம்படுத்தவும் பாடசாலைச் சமூகத்தவரோடு பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பளிப்பதே தமிழ்க் கதிரின் நோக்கமாகும்.

தமிழ்க்கதிர் வெளிவர மிகுந்த பிரயத்தனத்துடன் உழைத்த பதிப்பாசிரியர் திரு. க.பிரபாகர் அவர்களுக்கும் நிர்வாகக் குழுவினருக்கும் மாணவர்களை ஊக்குவித்து அவர்களின் ஆக்கங்களைச் சேகரித்துத் திருத்தங்கள் செய்து உதவிய வகுப்பாசிரியர்களுக்கும் ஆக்கங்களை வழங்கிய மாணவர்களுக்கும் ஊக்கமளித்த பெற்றோர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது பங்களிப்பினை வழங்குவதனூடாகத் தமிழ்க்கதிர் தரமான ஆக்கங்களைத் தாங்கித் தொடர்ந்து வெளிவரவேண்டும். மாணவர்களின் எழுத்தாற்றலை வளரக்கக் களமாக நின்று உதவவேண்டும். அதனூடாக மாணவர்களது எழுத்தாற்றல் வளரும், அத்துடன் வாசிப்பாற்றலும் வளர வழிபிறக்கும் என நம்புகிறேன். ஆதலால் மாணவர்கள் எல்லோரும் தங்கள் பங்களிப்பினை வழங்கிப் பயனடைய வாழ்த்துகிறேன்.

**திருமதி. புவனேஸ்வரி புருஷோத்தமர்**
**அதிபர்**
**தமிழ்க் கல்வி நிலையம்**
**ஹோம்புஷ் 21.11.24**





# ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் தலைவரின் வாழ்த்துச் செய்தி

**எழுத்தின்** வன்மை கூரிய வாளினை வென்றது என்றால் மிகையாகாது! நாம் படைக்கும் ஒவ்வொரு ஆக்கங்களும் நமது மொழியின் வன்மையையும் அதன் தொன்மையையும் எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாது, நம் வாழ்க்கையின் சிறப்பினையும் எங்களது எண்ணங்களின் படைப்பாற்றல்களையும் சித்தரிக்கும் ஒரு பலம்வாய்ந்த கருவியாகவும் விளங்குகின்றது.

இரண்டாம் மொழியில் எழுதுவது பல சமயம் சவாலாக இருக்கலாம். அனால் இந்தச் சவாலை நமது திறமையை வெளிப்படுத்தும் ஒரு வாய்ப்பாக மாற்றிக் கொள்ள வேண்டும். இப் பயணத்தில் விடாமுயற்சி, பயிற்சி, சரியான எழுத்து முறைகள், புதிய வார்த்தைகள், புனைவுகள் நமக்கு எளிதாகப் புரியும் பரிமாணத்தை உருவாக்கும். எழுத்து அறிவை பகிர்ந்து கொள்வதற்கும், நமது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் அதிமுக்கியமான ஒரு கருவியாகும்.

மாணவர் ஆக்கங்கள், அவர்களது திறனை மட்டுமன்றி, படைப்பாற்றல், கற்பனைத்திறன், ஆளுமை மற்றும் தமிழ் மூலம் தொடர்பாடும் திறனையும் ஊக்கப்படுத்துகின்றது. இதற்கு ஹோம்புஷ் தமிழ்க்கல்வி நிலையத்தின் தமிழ்க் கதிர் ஒரு சிறந்த கருவியாகத் தொடர்ந்தும் செயற்படும் என்பதில் ஐயமில்லை.

இனிவரும் காலங்களிலும் இந்த ஆக்கங்கள் மாணவர்களாலும் பெற்றோர்களாலும் இலகுவாகப் பெறுக்கொள்ள, இவ்வருடம் முதல் தமிழ்க் கதிர், ஹோம்புஷ் தமிழ்க்கல்வி நிலையத்தின் mobile app கைப்பேசிச் செயலியிலும் மின்னிதழாக கிடைக்குமென்பதில் நான் மிகவும் பெருமிதமடைகின்றேன்.

இதற்காக அயராது உழைத்து இதனை வெளிக்கொணர காரணகர்த்தாவாக இருந்த எமது கல்லூரியின் பதிப்பாசிரியர் திரு பிரபாகர் கனகசபாபதி அவர்களையும், எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் எமது கல்லூரியின் ஆசிரியர்கள் அனைவரையும், நிர்வாகக் குழுவில் இணைந்திருந்து சுயநலமின்றித் தொடர்ந்தும் பணியாற்றிக் கொண்டிருக்கும் அனைத்து நிர்வாகக் குழு அங்கத்தவர்களையும், பெற்றோர்கள் மற்றும் சிறப்பான ஆக்கங்களை திறம்பட படைத்த எமது மாணவச்செல்வங்களையும் இவ்வருட தமிழ்க் கதிருடாக வாழ்த்தி எனது மனமார்ந்த நன்றிகளை கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எழுத்துக்கான ஆர்வம் துவங்கும் பருவம் முதல், படைப்புகளை வெளியிடும் சவால்கள், அவற்றின் மேம்பாடுகள் அனைத்தும், நம்முடைய சிந்தனைகளை உலகத்துடன் பகிர்ந்துகொள்ளும் பயணத்தின் ஒரு பாகமாகும். அந்த பயணத்தை துவங்கும் மாணவர்களே, உங்கள் எண்ணங்களை, உணர்வுகளை எழுதுங்கள்! உங்கள் மொழி, உங்கள் கலாசாரம், உங்கள் பாரம்பரியம் - இவை அனைத்தும் அழகிய புனைவுகளாக உருமாறட்டும்! எழுத்தினால் நம் ஆழமான சிந்தனைகளை வெளிப்படுத்தி, சமூகத்தில் மாற்றங்களை கொண்டு வர முடியும். அதற்காகவே, எழுத்தின் பலத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் அறிந்து, தொடர்ந்து படைப்பாற்றலுடன் செயற்படுங்கள்.

நாம் இப்போது உருவாக்கும் சொற்கள், படைப்புக்கள், கருத்துக்கள் நாளைய காலங்களில் நமது வரலாற்றின் பகுதியாக மாறும். அதுவே இந்த இலக்கியப் பகுதிகளின் அழகு. எனவே, தொடர்ந்தும் இதுபோன்ற நல்லாக்கங்கள் எமது கல்வி நிலையத்திலிருந்து வெளியாக வேண்டும். இதற்காக அனைவரும் தொடர்ந்து, இணைந்து பணியாற்ற வேண்டும் எனத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, இவ்வருடம் இனிதே நிறைவேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**நன்றி**
**திருமதி கார்த்திகா ஜெயகணேஷ்**
**தலைவர் 2024 -**
**ஹோம்புஷ் தமிழ்க்கல்வி நிலையம்**



# ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலைய பதிப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி

**மாணவர்களது** தமிழாற்றலை அவர்தம் பால்ய காலத்தில் இருந்தே விருத்தி செய்வதில், ஆண்டுகள் பல கடந்த ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் செயற்பாடு போற்றத்தக்கது.

அவுஸ்திரேலிய மண்ணில் தமிழைப் பேணிப் பாதுகாக்கும் கல்விச் சாலைகளில் ஒன்றாக இவ் அரும்பணியை முன்னெடுத்து வரும் சுழலில், தமது மாணாக்கரின் தமிழ் சார்ந்த சிந்தனைக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் வகையில் தமிழ்க்கதிர் என்ற மாணவர் சஞ்சிகையை வருடம் தோன்றும் இக்கல்வி நிலையம் கொடுத்து வருகின்றது.

அந்த வகையில் 2024 ஆம் ஆண்டு நிறை வெய்தும் சூழலில் இந்த ஆண்டுக்கான தமிழ்க்கதிர் சஞ்சிகையை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

இந்தச் சஞ்சிகை மாணவர்களது சித்திரத் திறன், பல்வேறு களங்கள் சார்ந்து எழுதிப் பகிர்ந்திருக்கும் ஆக்கங்கள் என்று அணி செய்கின்றது.


உலகின் தலை சிறந்த எழுத்தாளர்கள் பின்னாளில் அப்புகழை நிலை நிறுத்துவதற்கு ஏதுவாக அமைந்தது அவர்களது பிள்ளைப்பிராயத்தில் எழுதத் தொடங்கிய தன் பரிணாமம் எனலாம். நமது தமிழ்க்கதிர் சஞ்சிகையும் எதிர்காலத்தில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சூழலில் பல நல்ல சிந்தனையாளர்கள், எழுத்தாளர்களை உருவாக்க வேண்டும் என்பதே நம் அவா.


எதிர்வரும் காலத்தில் இச்சஞ்சிகை ஹோம்புஷ் தமிழ்க்கல்வி நிலையத்தின் பிரத்தியோக செயலியிலும் **(mobile app)** கிடைக்கவிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியோடு, தொழில் நுட்ப வாகனத்தில் நாமும் ஏறி அடுத்த படி நிலையில் **podcast** என்ற ஒலிப்பகிர்வு செயற்பாட்டுக்கும் மாற வேண்டிய முறைமைக்கு 2025 ஆம் ஆண்டினை எதிர்கொண்டு வரவேற்போம்.

ஒரு குறுகிய காலத்தில் சஞ்சிகைக்கான ஆக்கங்களை எழுதிய மாணவர்களுக்கும், அவர்தம் பெற்றோருக்கும், ஆசியர்கள் மற்றும் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலைய நிர்வாகத்தினருக்கும் நன்றியறிதலைப் பகிர்ந்து கொள்கிறேன்.


**க.பிரபாகர்**
**பதிப்பாசிரியர்**


விநாயகர் சதுர்த்தி
U.K.G







ப. ஜெய்
பாலர் கீழ்ப்பிரிவு


பா. சா. பிரணவ்
UKG - P
தீபாவளி வாழ்த்துக்கள்


ஹாசினி.ச
பாலர் முன்பள்ளி
27





eeksha. K.


பாலர் முன்பள்ளி
iHeartCraftyThings.com



நாவியா ஜனநாயகம், LKG









இனிய தீபாவளி

வாழ்த்துக்கள்

- இனியன் சிவா


# அவளும் நானும்




அவள் எனது விடுமுறைக்காலச் செல்லப்பிராணி. அவள் ஒரு சிறிய ஆட்டுக்குட்டி. எனது ஆட்டுக்குட்டியின் பெயர் மீனாட்சி. மீனாட்சிக்கு வயது மூன்று கிழமை. அது "மே மே" என்று கத்தும். மீனாட்சி இலை குழைகளை விரும்பிச் சாப்பிடும். அதன் நிறம் வெள்ளை. நான் அதைத் தூக்கி விளையாடுவேன். என்றும் அது மகிழ்ச்சியைத் தரும்.


ஹரிணி பவன்
ஆண்டு 2



Anika Vijayaratnam
Park





1K
சுணிஷ்கா


Rithvik
1K


1k Aran Srinivasan அரன்
thipavali




Class 1-K
rangoli

தீபாவளி – அய்ணா ஜெயகணேஷ்
ஆண்டு 2K

தீபாவளி ஒரு தமிழர் பண்டிகை.

தீபாவளி ஐப்பசி மாதத்தில் வரும்.

தீபம் என்றால் ஒளி.


விளக்குகளால் நாம் வீட்டை
தீபாவளிக்கு அலங்கரிப்போம்.

அம்மா தீபாவளிக்கு நிறைய
இனிப்புப் பண்டங்களை செய்வார்.

தீபாவளி அன்று புத்தாடை
அணிவோம்.

இரவில் வீட்டில் எனது குடும்பத்-
-துடன் பூந்திரி கொளுத்தி
விளையாடுவோம்.

தீபாவளி எனக்கு மிகவும் பிடித்த
ஒரு தமிழர் பண்டிகை.



# மயில்

மயில் ஒரு பறவை. மயில் அழகான பறவை. ஆண் மயிலிற்குத் தோகை உண்டு. இது தோகை விரித்து ஆடும் பொழுது மிக அழகாக இருக்கும்.

பெண் மயில் முட்டை இடும். மயில்களில் சில வெள்ளை நிறமாக இருக்கும். மயில் இந்தியாவின் தேசிய பறவை.

~ சச்சின் சதீஷ் ~ 2N



# புர்ஜ் கலிஃபா

ஆதவன்
2N



புர்ஜ் கலிஃபா எனக்கு மிகவும் பிடித்த கட்டிடம்.
இது உலகிலேயே மிக உயரமான கட்டிடம்.
புர்ஜ் கலிஃபா 828 மீட்டர் உயரமானது.
இது துபாயில் 2009 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
கட்டி முடிக்க ஐந்து வருடங்கள் ஆனது.
எனது 10வது பிறந்த நாளுக்கு நான் துபாய்
சென்று புர்ஜ் கலிஃபா பார்ப்பேன்.





பிக்கசு மித்ரன் .சி

பாலர் மேற்பிரிவு.


LK
நிலமகள

யசீர்த்தனா. பி

தரம் 1V


# பூனை



1. நான் விரும்பும் பிராணி பூனை.
2. பூனை பாலை விரும்பி குடிக்கும்.
3. அது மியாவ் மியாவ் என கத்தும்.

மியாவ் மியாவ்

# மயில்



1. மயில் அழகான பறவை.
2. மயிலுக்கு நீண்ட தோகை இருக்கும்.
3. மயில் தோகை விரித்து ஆடும்.
4. மயில் இந்தியாவின் தேசிய பறவை.

ஆண்டு-1 V
அகஷிகா

# முயல்



எனது செல்லப்பிராணி முயல்.

என் முயலின் பெயர் செல்லம்.

செல்லம் வெள்ளை நிறம்.

செல்லம் துள்ளித் துள்ளி ஓடும்.

செல்லம் கரட்டை விரும்பிச் சாப்பிடும்.

செ. ரேஷிகா
ஆண்டு - 1V


# அணில்

Krishna
ஆண்டு IV

1. அணில் ஒரு சிறிய மிருகம்.
2. அணிலின் முதுகில் 3 கோடுகள் இருக்கும்.
3. அணில் பழங்களை விரும்பி உண்ணும்.
4. அணிலுக்கு மரத்தில் ஏற விருப்பம் உண்டு.
5. அணில் மண்ணிறம் மற்றும் சாம்பல் நிறங்களில் இருக்கும்.



மிருதுளா திரிசூலன்



1. எனக்கு பிடித்த பறவை வாத்து.
2. எனது அம்மா அப்பா என்னை வாத்து குஞ்சு என்று கூப்பிடுவார்கள்.
3. வாத்து குளத்தில் வாழும்.

ஆண்டு 1V

# பட்டம் விடுவோம்



அன்று ஒரு நாள் மாலை நேரம். அப்பா எங்களை ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்றார். எங்களுக்கு வியப்பாக இருந்தது. போகும் வழியில் எங்களை ஒரு கடைக்குக் கூட்டிச் சென்றார். கடை நிறையப் பட்டங்கள் இருந்தன. அதில் ஒரு பட்டத்தை வாங்கி நாங்கள் கடற்கரைக்குப் போனோம். வானம் முழுக்க விதம் விதமான பட்டங்கள் பறந்து கொண்டிருந்தன. எனக்கும் தங்கைக்கும் ஒரே மகிழ்ச்சி.

அப்பா பட்டத்து நூலைப் பிடித்து
பட்டத்தை ஏற்றினார். பட்டம் "விண்" என்று
வானத்தை நோக்கி சென்றது. அப்பா
பட்டத்தை எனக்குத் தந்தார். நான் பட்டத்து
நூலைப் பிடித்து கடற்கரையால் நடந்தேன்.
அம்மா எங்களைப் படம் எடுத்தார். எங்களது
பட்டமும் வானிலே பறந்தது. தங்கையும்
நானும் மாறிமாறி பட்டது நூலைப்
பிடித்தோம்.

ஹரிணி பவன்
ஆண்டு 4



## நான் கொண்டாடிய நவராத்திரி / வாணிவிழா

* நவராத்திரி புரட்டாதி / ஐப்பசி மாதத்தில் நாங்கள் கொண்டாடுவோம்.
* கோயில்களிலும், வீடுகளிலும் கொலு வைத்து கும்பிடுவோம்.
* முதல் மூன்று நாட்கள் வீரம் தரும் துர்க்கையை கும்பிடுவோம்.
* அடுத்த மூன்று நாட்கள் செல்வம் தரும் இலக்குமியை கும்பிடுவோம்.
* அடுத்த மூன்று நாட்கள் கல்வி தரும் சரஸ்வதியை கும்பிடுவோம்.
* கல்வித் தெய்வத்தை வாணி என்றும் அழைப்போம்.
* நாங்கள் பிள்ளையார் கோயில், துர்க்கை அம்மன் கோயில், முருகன் கோயில்களில் தோத்திரப் பாடல்கள் பாடினோம்.
* பத்தாம் நாள் விஜயதசமி அன்று சிறுவர்களுக்கு ஏடு தொடக்குவார்கள்.
* விஜயதசமி அன்று நானும், எனது தம்பியும் எங்கள் சங்கீத ஆசிரியரிடம் ஆசி பெற்றோம்.

லைலா
முரளிகிருஷ்ணா
ஆண்டு 3T

விஜயதசமி அன்று



நானும், எனது தம்பியும் எங்கள் சங்கீத ஆசிரியருடன்.

சௌவதி பூசை



அத்தை வீட்டுக் கொலுவில் நான்



ஏடு தொடக்குதல்
சிட்னி முருகன் கோயிலில் அம்மப்பா எனக்கு ஏடு தொடக்கினார்.

# என்னைப் பற்றி

1. என் பெயர் ஆரவ்.

2. நான் மூன்றாம் வகுப்பில் படிக்கிறேன்.

3. நான் சிட்னி நகரில் வசிக்கிறேன்.

4. எனக்கு பிடித்த நிறம் நீலம்.

5. எனக்கு வலைப்பந்து விளையாட பிடிக்கும்.



ஆரவ்

3N

காா்த்திக்
சுரேந்திரன் ஆண்டு
3T

# திருக்குறள்

திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.
திருக்குறளின் மறுபெயர்கள் தமிழ்மறை மற்றும் முப்பால் நூல்.
திருக்குறள் மூன்று பிரிவுகளைக் கொண்டது.
அவையாவன அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் ஆகும்.

இதனால் முப்பால் நூல் என்று அழைக்கப்படுகிறது.
திருக்குறளில் 133 அதிகாரங்கள் உள்ளன.
ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 குறள்கள் உள்ளன.
திருக்குறளில் 1330 குறள்கள் உள்ளன.
ஒவ்வொரு திருக்குறளும் 2 வரிகளைக் கொண்டிருக்கும்.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி."

ஆலங்குச்சியும் வேப்பங்குச்சியும் பல்லிற்கு வலிமை தருவதுபோல நாலடியாரும், திருக்குறளும் படிப்பதால் சொல்வளம் பெருகும்.

திருவள்ளுவரின் 133 அடி உயர சிலை கன்னியாகுமரிக் கடலில் நீர் மட்டத்தில் இருந்து 30 அடி உயரமான பாறையில் அமைந்துள்ளது.
சிட்னியில் துர்க்கை அம்மன் கோவில் வளாகத்திலும், பெண்டில்ஹில் சிவிக் பூங்காவிலும் திருவள்ளுவர் சிலைகள் அமைந்துள்ளன.
திருக்குறள் கிட்டத்தட்ட 82 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
மாணவர்களாகிய நாமும் திருக்குறள்களையும் அவற்றின் பொருளையும் படித்து பயன் பெறுவோம்.





டாக்டர் ஏ.பி ஜே. "இந்தியாவின் ஏவுகணை மனிதர்" என்று அழைக்கப்படும் அப்துல் கலாம். இந்தியாவின் பாலிஸ்டிக் ஏவுகணை மற்றும் விண்வெளித் திட்டங்களின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றினார். 2002 முதல் 2007 வரை இந்தியாவின் 11 வது குடியரசுத் தலைவராகப் பணியாற்றினார்

அவரது தொலைநோக்கு மற்றும் தலைமைத்துவத்தின் மூலம் மில்லியன் கணக்கானவர்களை ஊக்கப்படுத்தினார்

2N Rishik S


எனது செல்ல பிராணி



1. எனது செல்ல பிராணி முயல்.
2. முயல் வேகமாக ஓடும்.
3. முயலின் தோல் மிருதுவாக இருக்கும்.
4. அது வெள்ளை, கறுப்பு, மண்ணிறத் நிறத்தில் இருக்கும்.
5. முயல் காட்டுபுல், சிவப்பு முள்ளங்கி விரும்பி உண்ணும்.
6. முயலை நாம் வீட்டில் வைத்து வளர்க்கலாம்.

கனிஷா கணேசராஜ் : 3N

3N


Jeswin class 1K

# பருவகாலங்கள்







1. அவுஸ்திரேலியாவில் நான்கு பருவகாலங்கள் உள்ளன.
2. அவை கோடைகாலம், இலையுதிர்காலம், குளிர்காலம், வசந்தகாலம் என்பனவாகும்.
3. கோடைகாலத்தில் சூரியன் பிரகாசமாக ஒளிரும்.
4. இலையுதிர் காலத்தில் இலைகள் உதிரும்.
5. குளிர்காலத்தில் மிகவும் குளிராக இருக்கும்.
6. வசந்தகாலத்தில் பூக்கள் பூக்கும்

பெயர்: கணேஷ் விக்னாஹரன் - 3N

# பருவ காலங்கள்



## கோடை காலம்

கோடை காலத்திற்கு உரிய மாதங்கள் மார்கழி தை, மாசி இக்காலத்தில் பருத்தி உடைகள் அணிவோம். வெயில் அதிகமாக இருப்பதால் ஐஸ்கிறீம் சாப்பிடுவோம். கடற்கரைக்கு சென்று கடலில் நீந்துவோம்.



## இலையுதிர் காலம்

இலையுதிர் காலத்திற்கு உரிய மாதங்கள் பங்குனி, சித்திரை, வைகாசி.
இக்காலத்தில் மரங்கள் இலைகளை உதிர்ந்து நிற்கும். ஈஸ்டர் பண்டிகை இக்காலத்தில் வரும். இந்த சமயம் கோடைகால வெப்பம் தணிந்து இருக்கும்.



## குளிர் காலம்

குளிர் காலத்திற்கு உரிய மாதங்கள் ஆனி, ஆடி, ஆவணி. இக்காலத்தில் கம்பளி உடை அணிவோம். பனி மனிதன் செய்வோம். பனியில் சறுக்கி விளையாடுவோம்.



## வசந்த காலம்

வசந்த காலத்திற்கு உரிய மாதங்கள் புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை. இக்காலத்தில் அழகான பூக்கள் மலரும். வாத்து கோழி போன்ற பறவைகள் முட்டைகள் பொரித்து குஞ்சுகள் வெளியே வரும்.

நிக்ஷா நிமலன் 3N

TUK TUK

முச்சக்கர வண்டி



இலக்கியா பிரபாகர் ஆண்டு 4

## எனது அமெரிக்க பயணம்



இந்த வருடம் சித்திரை மாதம். நான் எனது அம்மாவுடன் அமெரிக்காவுக்குச் சென்றேன். இது எனது அம்மாவின் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் படிப்புக்கான பயணம். நாங்கள் இதன் போது சன்பிரான்சிஸ்கோ (sanfransico) நகரிலும் லொஸ்ஏஞ்சல் (los angel) நகரிலும் மூன்று வாரங்கள் தங்கி இருந்தோம். இதன் போது நான் பல்வேறு பிரசித்தமான இடங்களைப் பார்வையிட்டோம். அதில் ஒன்று ஹொலிவுட் (Hollywood) படங்களைத் தயாரிக்கும் யுனிவசல் ஸ்ருடியோவுக்கும் சென்றோம். அங்கு மிக்கி மவுஸ், மினி மவுஸ், கூபி (goofi) ஆகிய படப் பாத்திரங்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டோம். அத்துடன் கடல்சிங்கம் பலவற்றையும் கடற்கரையில் பார்த்து மகிழ்ந்தேன். லொஸ் ஏஞ்சலில் டிஸ்னி லான்டிற்கு (Disenyland) சென்று பல விதமான விளையாட்டுகளில் ஈடுபட்டேன். நீர் விளையாட்டு எனக்கு மிகவும் பிடித்தது சன்ரமோனிக்கா கடற்கரையாகும்.

பிரீத்தி ஜக்சன்
வகுப்பு 4

## நாங்கள் கொண்டாடும் பண்டிகை "பொங்கல்"



நாங்கள் கொண்டாடும் பண்டிகை
பொங்கல். தமிழர் திருநாளாம் பொங்கல்
பண்டிகை தை மாதத்தில் கொண்டாடப்படுகிறது.
பொங்கல் திருநாள் அன்று, பொங்கல் வைத்து
புது ஆடைகள் உடுத்தி சூரியனுக்கு
"நன்றி" சொல்லுவோம். உழவர்
திருநாளாம் இந்த தைத் திருநாள்

நாங்கள் கொண்டாடும் பண்டிகை

"பொங்கல்"



பாரெங்கிலும் உள்ள தமிழர்களால் மிகச்சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது. நாங்கள் எங்கள் நண்பர்களுடனும் உறவினர்களுடனும் ஒன்று சேர்ந்து பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவோம்.

நன்றி

மே.க. பகவதிராசன்
4 - ஆம் வகுப்பு
ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம்

# பாரதியார்

பாரதியார் ஒரு சிறந்த தமிழ்ப் புலவர் இந்தியாவில் உள்ள எட்டையபுரம் என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சின்னசுவாமி ஐயர். தாயார் பெயர் இலக்குமி அம்மாள். இவருக்கு அம்மாவும் அப்பாவும் வைத்த பெயர் சுப்பிரமணியன். இதனால் இவரை சுப்பிரமணிய பாரதியார் என்று அழைப்பார்கள்.

இவர் சிறு வயதிலேயே தமிழ்ப் புலமை பெற்றவர். இவர் சிறுவர்களுக்காகவும், பெண் விடுதலைக்காகவும் இந்தியாவின் சுதந்திரத்திற்காகவும் பல பாடல்களை பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்களில் ஓடி விளையாடு 'பாப்பா' என்ற பாடல் எனக்கு மிகவும் விருப்பம்.

பாரதியார் எழுதிய பாஞ்சாலி சபதம் என்னும் நூல் மிகவும் பிரசித்தி பெற்றது. பல மொழிகளில் புலமை பெற்ற பாரதி தமிழ் மொழியின் மீது மிகவும் பற்றுக் கொண்டிருந்தார். இவர் ஒரு நல்ல இதழாசிரியர் மட்டுமல்லாது, ஒரு சிறந்த கவிஞர், விடுதலைப் போராட்ட வீரர், மற்றும் சமூக சீர்திருத்த-வாதியாவார்.

இவரை பலரும் மகாகவி பாரதியார் என்றும் அழைப்பார்கள். இவருடைய மனைவியின் பெயர் செல்லம்மாள். இவரது 38 வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

- அமரா ஜெயகணேஷ்
ஆண்டு 5

8/17-18 கூடு தெரு
லிட்காம்
நி.ச.வே 2041
3/11/24

அன்புள்ள தீபனுக்கு,

நான் நலமாக இருக்கிறேன் நீங்களும் நலமாக இருப்பீர்கள் என் நம்புகிறேன்.

உங்கள் பிறந்தநாள் பரிசுக்கு நன்றி. எனக்கு மிகவும் மகிழ்ச்சி நான் உங்களை மறக்க மாட்டேன்.

நான் தவளை நான்கு முடிந்து விட்டேன். எனது பிறந்தநாள் ஒவ்வொரு விடுமுறை திரைத்திலும் வரும்.

நான் எனது நண்பர்களை அழைத்திருந்தேன். ஒரு நண்பர் மட்டும் பிறந்த நாளுக்கு வரவில்லை

அப்பா ஒரு வில்லாவை வாடகைக்கு எடுத்திருந்தார். அங்கேதான் எனது பிறந்தநாள் கொண்டாட்டம் நடைபெற்றது.

அப்போது எனது கேக்கை யாரோ திருடி விட்டார்கள். நாங்கள் தேடிக்கொண்டிருந்த போது ஒர் கோமாளி திடீரென கேக்கோடு வந்தார். நாங்கள் சந்தோஷமாகி நான் கேக்கை வெட்டி பாடலைப் பாடி விழாவை கொண்டாடினோம்.

உனது பதிலை எதிர் பார்த்து காத்திருக்கிறேன்

நன்றி
இப்படிக்கு
அங்கஜன்

**(Composite) கூட்டு வகுப்பு**

30, செளமியன் வீதி
நி.சௌ.வே 2141
13/11/24

அன்புள்ள பவித்ரா,

நான் சுகமாக இருக்கிறேன். நீங்களும் சுகமாக இருக்க இறைவனை வேண்டுகிறேன். நான் உனக்கு அவுஸ்திரேலியாவில் [illegible] உலுரு பாறை பற்றி உனக்கு கடிதம் எழுதுகிறேன்.

அவுஸ்திரேலியாவில் எல்லோர் மனதிலும் உலுரு பாறை பற்றி [illegible] உலுரு பாறை [illegible] [illegible] உலுரு பாறை [illegible] நடையானது.

உலுரு பாறை 350மீ உயரமானது. உலுரு ஒரு புனிதமான உலக பாரம்பரிய தளமாகும். உலுரு பாறையின் நிறம் சிவப்பு. நேரம் வெவ்வேறு நிலைகளில் தன் நிறத்தை மாற்றிக் கொள்ளும் பாறை இது. இப்பாறையின் அடிவாரத்தில் உள்ள குகைகளில் மிகப்பழமையான பழைய ஓவியங்களும் செதுக்கப்பட்ட சில உருவங்களும் உள்ளன.

இந்த கடிதத்தின் மூலம் உனக்கு உலுரு பாறை பற்றிய சிறப்பான தகவல்களை அறிந்திருப்பாய் என்று நம்புகிறேன்.

அன்புடன்
ஷிவானி

ஷிவானி. ககநேசன்

**(Composite) கூட்டு வகுப்பு**

# தீபாவளி

1 தீபாவளி என்பது விளக்குகளின் பண்டிகை.
2 இது இந்தியாவின் மிகப் பெரிய பண்டிகை.
3 அது ஒரு இந்து பண்டிகை.
4 இது பொதுவாக அக்டோபர் மாதத்தில் விழும்.
5 அரக்க மன்னன் இராவணனை தோற்கடித்து ராமர் வீடு திரும்பியதை தீபாவளி கொண்டாடுகிறது.

வி. தேஜஷ் ஹரிகரன்
சி.சி.எ வகுப்பு

**(Composite) கூட்டு வகுப்பு**

4-நிப்பர் வீதி,
ஹொம்புஷ,
நிசவே 2140.
5-11-2024

அன்புள்ள ஆசிரியர்,

நான் சுகமாக இருக்கிறேன். நீங்களும் சுகமாக இருப்பீர்கள் என நம்புகிறேன்.

நான் தமிழ் படிப்பதற்கு மிகவும் ஆவலாக இருக்கின்றேன். எனவே நீங்கள் எனக்கு தயவு கூர்ந்து தமிழை நன்றாக, கற்பித்துத் தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு தமிழ் மீது மிகுந்த பற்று உள்ளது. ஆகையால் நான் மிகுந்த கவனத்துடன் தமிழை ஆர்வத்துடன் கற்றுக் கொள்வேன்.

இப்படிக்கு
அன்பு மாணவி,
டிவைனா

டிவைனா சரவணா ராஜா

**(Composite) கூட்டு வகுப்பு**



28, சுமாஸ் வீட் அவனியூ
ஹோம்புஷ்
நி.சௌ.வே-2140
15/11/24

மதிப்பிற்குரிய ஆசிரியர்,

நான் நலம். நீங்கள் நலமா? நான் ஏன் தமிழ் படிக்கிறேன்
என்று உங்களிடம் பகிர ஆசைப்படுகிறேன். நான்
தமிழ் நாட்டில் பிறந்தேன். என் நாடு தமிழ்நாடு. என் மொழி
தமிழ் மொழி. எனக்கு கொஞ்சம் தமிழ் பேசத் தெரியும்.
நான் தமிழ்மொழியைக் கற்க மிகவும் ஆசைப்படுகிறேன்.
அதற்கு உங்கள் உதவியை நாடுகிறேன். எனக்குத்
தமிழ்க் கற்றுத் தருவீர்களா?

என்றும் அன்புடன்,
சைஃப்

சைஃப் முசாபர்

(Composite) கூட்டு வகுப்பு

# தீபாவளி

1) தீபாவளி ஐப்பசி மாதத்தில் கொண்டாடப்படும்.

2) தீபாவளி இந்துக்கள் கொண்டாடும் ஒரு பண்டிகை

3) தீபாவளியை தீபத் திருநாள் என்றும் கூறுவார்கள்.

4) வீட்டில் பெரிய கோலம் போடுவோம்.

5) கோலங்களைச் சுற்றியும் வேறு இடங்களிலும் தீபங்கள் வைப்போம்.

6) நாம் தலைக்கு எண்ணெய் தேய்த்து குளிப்போம்

7) புது உடை அணிவோம்.

8) கோயிலுக்கு செல்வோம்

9) உறவினர்கள் வீட்டுக்கு செல்வோம்.

10) அவர்கள் கைவிசேடம் தருவார்கள்.


11) இரவு பட்டாசு கொளுத்துவோம்...

சாயந்தி சிவரூபன்

**(Composite) கூட்டு வகுப்பு**

# தீபாவளி

1. தீபாவளி என்பது விளக்குகளின் பண்டிகை.
2. இது இந்தியாவின் மிகப்பெரிய பண்டிகைகளில் ஒன்றாகும்.
3. இது ஒரு இந்து பண்டிகை.
4. இது பொதுவாக அக்டோபர் மாதத்தில் வரும்.
5. அரக்க மன்னன் இராவணனை தோற்கடித்து ராமர் வீடு திரும்பியதை தீபாவளி என கொண்டாடுகிறோம்.



வி. தேஜஸ் ஹரிகரன்

(Composite) கூட்டு வகுப்பு

28, [illegible] தெரு,
ஹோம்புஷ்,
நி.சௌ.வே - 2140
15/11/24

அன்புள்ள அப்பா,

நான் நன்றாக இருக்கிறேன். நீ எப்படி இருக்கிறாய்?
என் அப்பாவும் அம்மாவும் என்னுடைய பிறந்தநாளைக்
கொண்டாட முடிவு செய்தார்கள். என் நண்பர்களுக்கு
தொலைபேசியில் அழைப்பிதழ் அனுப்பினார்கள். எனக்கு பிடித்த
உணவுகள் பரிசுகள் வாங்கி தயார் செய்தார்கள். என் [illegible]
பலூன் கட்டி அழகாக அலங்கரித்தார்கள். என் பிறந்தநாள் அன்று
என் நண்பர்களுடன் நன்றாக என் நேரத்தை செலவு செய்தேன்,
மிகவும் பிடித்தது. நீயும் உன்னுடைய பிறந்தநாளை நன்றாகக்
கொண்டாடவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

என்றும் உன் அன்பான,
[illegible].

[illegible]

(Composite) கூட்டு வகுப்பு



28, சுடமால்டிட் அவனியு
ஹோம்புஸ்,
நி.சௌ.வே – 2140
15/11/24

அன்புள்ள ரூபா,

நான் நன்றாக இருக்கிறேன். நீ எப்படி இருக்கிறாய்? என் அப்பாவும் அம்மாவும் என்னுடைய பிறந்த நாளைக் கொண்டாட முடிவு செய்தார்கள். என் நண்பர்களுக்குத் தொலைப்பேசியில் அழைப்பிதழ் தந்தார்கள். எனக்கு பிடித்த உணவுகள், பரிசுகள் வாங்கித் தயார் செய்தார்கள். என் வீட்டை பலூன் வைத்து அழகுப் படுத்தினார்கள். என் பிறந்தநாள் அன்று என் நண்பர்களுடன் நன்றாக என் நேரத்தை செலவு செய்தேன், மிகவும் பிடித்தது. நீயும் உன்னுடையப் பிறந்தநாளை நன்றாகக் கொண்டாடுவாய் என்று ஆசைப்படுகிறேன்.

என்றும் உன் அண்ணன்,
ஆ.பி.

ஆ.பி.சோபா

**(Composite) கூட்டு வகுப்பு**

8/17-18 தேனு தெரு
விட்காம்
நி.ச.வே 2041
16/11/2024

அன்புள்ள தீபனுக்கு,

நான் நலமாக இருக்கிறேன் நீங்களும் நலமாக இருப்பீர்கள் என நம்புகிறேன்.

உங்கள் பிறந்தநாள் பரிசுக்கு நன்றி. எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நான் உங்களை மறக்க மாட்டேன்.

நான் நவலை நான்கை முடிந்து விட்டேன். எனது பிறந்தநாள் ஒவ்வொரு முறையும் விடுமுறையில் வரும்.

நான் எனது நண்பர்களை அழைத்திருந்தேன். ஒரு நண்பர் மட்டும் பிறந்த நாளுக்கு வரவில்லை.

அப்பா ஒரு வில்லாவை வாடகைக்கு எடுத்திருந்தார். அங்கேதான் எனது பிறந்தநாள் கொண்டாட்டம் நடைபெற்றது.

அப்போது எனது கேக்கை யாரோ திருடி விட்டார்கள். நாங்கள் தேடிக்கொண்டிருந்த போது ஒரு கோமாளி திடீரென கேக்கோடு வந்தார். நாங்கள் சந்தோஷமாகி நான் கேக்கை வெட்டி பாடலைப் பாடி விழாவை கொண்டாடினோம். இத்துடன் முடிக்கிறேன்.

உனது பதிலை எதிர் பார்த்து காத்திருக்கிறேன்

இப்படிக்கு
அஞ்ஜேன்

அங்ஜேன் ஞானசேகரம்.

(Composite) கூட்டு வகுப்பு

## அன்புள்ள நண்பி உசாவிற்கு,

நாங்கள் அனைவரும் நலம், நீயும் உனது குடும்பத்தினரும் நலமாக இருக்க இறைவனை வேண்டுகிறேன்.

நாங்கள் இம்முறை விடுமுறைக்கு எனது அம்மா, அப்பாவின் பிறந்த இடமான முள்ளியவளை கிராமத்துக்குச் சென்று அத்தை வீட்டில் தங்கி இருந்தோம். நாங்கள் வந்ததை அறிந்து எங்கள் உறவினர்கள் எங்களை பார்ப்பதற்கு வந்திருந்தார்கள். அவர்கள் எங்களுடன் பழகிய விதம் மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அடுத்த நாள் நாங்கள் அத்தையுடன் வற்றாப்பளை அம்மன் கோயில் பொங்கலுக்கு சென்றதும் அங்கு பக்தர்கள் காவடி, தூக்குகாவடி எடுப்பதும், தீ மிதிப்பது என தங்களது நேர்த்திகளை செய்தது மிகவும் பூரிப்பாக இருந்தது. அத்துடன் அக் கோயில் இயற்கை எழில் நிறைந்த இடத்திலே மிகவும் அமைதியான சூழலில் அமைக்கப்பட்டிருந்தது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

நாங்கள் எல்லோரும் மாமாவுடன் வயல் பார்ப்பதற்காகச் சென்றிருந்தோம். அங்கு வயல் வரம்பில் ஓடி விளையாடினோம். பின் அப்பா எங்களைக் குளம் பார்க்கக் கூட்டிச் சென்றார். அங்கு கலிங்கு பாயும் போது அதில் நாங்கள் குளித்து விளையாடினோம்.

பின் ஆற்றங்கரையில் உள்ள பாலமரங்களில் பாலப்பழம் பிடுங்கிச் சாப்பிட்டு தென்னத்தோப்புக்குச் சென்று இளநீர் குடித்துவிட்டு வீடு திரும்பினோம். வயல், தென்னத்தோட்டம், ஆற்றங்கரை என்பன மிகவும் பச்சைப்பசேலென எழில் நிறைந்து காணப்பட்டது. இவை எல்லாம் எனக்கு வித்தியாசமான அனுபவத்தைக் கொடுத்தது.

அடுத்த நாள் சித்தப்பாவுடன் மரக்கறித் தோட்டத்திற்குச் சென்றதும் அங்கு உள்ள மரக்கறிக் கன்றுகளுக்கு கால்வாயிலிருந்து தண்ணீர் விட்டதும், ஆடு, மாடுகளுக்கு வைக்கோல், புல் போட்டதும் எனக்கு மிகவும் பிடித்த ஒன்றாக இருந்தது.

உறவினர்கள் எங்களை வீட்டிற்கு அழைத்து மரக்கறி, மீன் என்பவற்றை புதிதாக வாங்கி வந்து மண் சட்டி பானையில் சமைத்து தந்ததும், அவர்களது பிள்ளைகளுடன் கிந்திக்கோடு, பல்லாங்குழி என்பன தமிழில் கதைத்து விளையாடியதும் மிகவும் மகிழ்ச்சியைச் தந்தது .

அடுத்த முறை போகும்போது நீங்களும் எங்களுடன் வர வேண்டும் என விரும்புகிறேன்.

இப்படிக்கு
உங்கள் நண்பி
அத்வைதா கூட்டு வகுப்பு

**(Composite) கூட்டு வகுப்பு**

# தந்தையர் தினம்

**முன்னுரை :**

தந்தையர் தினம் என்பது ஒவ்வொரு ஆண்டும் தந்தையின் மேன்மையைப் பாராட்டி அவர்களது பணி, தியாகம் மற்றும் அன்பை நினைவுகூரும் சிறப்பு நாள். தாயின் பாத்தைப் போன்று தந்தையின் அர்ப்பணிப்பும் முக்கியமானது. குழந்தையின் வளர்ச்சியிலும் அதன் வெற்றியிலும் தந்தையரின் பங்கு அளப்பரியது. இந்த தினம் அவர்களுக்கு நாம் பாராட்டுகளை வெளிப்படுத்தும் அழகிய தருணமாகிறது.

## தந்தையின் பணி:

தந்தை என்பவர் ஒரு குடும்பத்தின் தூணாக நிற்பவர் குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பையும் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொள்கிறார். தந்தையின் நல்வழிகாட்டுதல், சிந்தனை மற்றும் செயல்களே குழந்தையின் வாழக்கையை நெறிப்படுத்தும். அவர் கற்பிக்கும் அடிப்படை விடயங்கள் குழந்தைகளின் எண்ணங்களிலும் செயல்களிலும் எதிரொலிக்கின்றன.

## தியாகம் மற்றும் கடமை:

தந்தையின் வாழ்க்கை என்பது பல தியாகங்களால் ஆனது. அவர் பல்வேறு சவால்களை சந்தித்து தனது குடும்பத்தின் நலனுக்காகவே கடினமாக உழைக்கிறார். தன்னுடைய சொந்த ஆசைகளைப் புறந்தள்ளி குழந்தைகளின் தேவைகளுக்காக அயராது உழைப்பது தந்தையின் பெருமை. பணியில் இருக்கும் கடின சூழலையும், குடும்பத்தில் உள்ள பாசப் பிணைப்புகளையும் சமநிலைப்படுத்துவதில் அவர் ஆற்றும் தியாகம் அறியப்படாததாகவே இருக்கிறது.

தந்தையர் தினத்தின் முக்கியத்துவம்:

குழந்தைகள் அவர்களின் தந்தையரின் மேல் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்தவும், அவர்களுக்கு நன்றி செலுத்தவும் சிறந்த வாய்ப்பாக தந்தையர் தினம் அமைகிறது. இதை நம் குடும்பங்களில் கொண்டாடுவது, தந்தையின் பணி மற்றும் அர்ப்பணிப்பை அடையாளப்படுத்தும் ஒரு நல்ல நிகழ்வாகும். தந்தையர் தினம் வழியாக குந்தைகள் தந்தையிரின் மதிப்பை உணர்ந்து கொள்வது அவசியமாகிறது.

## முடிவுரை:

தந்தையர் தினம் என்பது தந்தையரின் பாத்தை, தியாகத்தை மற்றும் கடமையை நினைவுபடுத்தும் பொன்னான தருணம். தந்தையின் அன்பையும் வழிகாட்டுதலையும் மறக்காமல் அவர்களின் அர்ப்பணிப்புக்கு நன்றி தெரிவிக்க வேண்டிய நாள் இத.

இந்நாளில் மட்டுமல்லாது எந்நாளும் தந்தையைப் புரிந்து கொண்டு அவர் மீது நம் அன்பைப் பொழிவோம்.

**ரித்விக் இராமன்**
**வகுப்பு 6T**



## உடற்பயிற்சியின் அவசியம்

எமது உடலும் மனமும் ஆரோக்கியமாக இருந்தால், நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம். உடலை நலமாக வைத்திருக்க பல விழிகள் உள்ளன. அதில் உடற்பயிற்சி முக்கியமானது.

இப்பொழுது, தொழில்நுட்பதில் மக்கள் மூழ்கி இருப்பதினால், வெளியே செல்வது குறைவு. தொலைபேசி, கணனி பார்ப்பது எங்களுடைய கண்களுக்கு தீமையானது. இதை தவிர்க்க, "வெளியே சென்று பசுமையான இயற்கையைப் பார்க்கலாம்." என்று விஞ்ஞானிகள் ஆலோசனை கூறுகிறார்கள்.

துடுப்பாட்டம், காலப்பந்து, வலைப்பந்து, கூடைப்பந்து, பூப்பந்து, மேசைப்பந்து, நீச்சல், போன்ற விளையாட்டுகளை உடலை விளையாடுவதன் மூலம் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கலாம். இப்போது, எல்லா இடங்களிலும் உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் சீறுடல் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன. வெளியே செல்லாது அங்கு இருந்து உடற்பயிற்சி செய்யலாம்.

வேலை செய்யும் இடங்களிலேயும் சிறிய உடற்பயிற்சிக் கூடங்கள் இருக்கின்றன. அத்துடன் நீண்ட நேரம் இருந்து வேலை செய்வதை தவிர்க்க உயர்ந்த மேசையை வேலை பயன்படுத்தலாம்.

"ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா." என்று மகாகவி சுப்பிரமணிய பாரதியார் குழந்தைகளுக்கு பாடியுள்ளார். இவ்வழியே நாமும் பின்பற்றுவோம்.

- லவாங்கி பகீரதன்
ஆண்டு 8

## முதியோர் பராமரிப்பு


ஒரு மனிதரின் வாழ்க்கையில் பல பருவங்கள் இருக்கின்றன. குழவிப் பருவத்திலிருந்து தொடங்கி, குழந்தைப் பருவம், பதின்மைப் பருவம், இளமைப் பருவம், இறுதியில் நாம் இறப்பதற்கு முன் வரும் பருவம் முதுமைப் பருவமாகும். ஒருவருக்கு வயது போனால், முதியோர் என்று அழைப்போம். ஆகவே, எமது அம்மம்மா, தாத்தா, பாட்டி, பாட்டா ஆகியோர் முதியோர் என்று அழைக்கலாம்.

முதியோர்களுக்கு ஏன் உதவி தேவையென்று நீங்கள் எப்பொழுதாவது யோசித்ததுண்டா? முதியோர்களுக்கு வயது போனவுடன் அவர்களுக்கு உடம்பில் பல வலிகளும் நோய்களும் வரலாம். உதாரணமாக, முதுகு வலி, மூட்டு வலி போன்ற வலிகள் வர ஆரம்பிக்கும். அத்துடன் இருதய நோய், நீரிழிவு நோய் போன்ற நோய்களும் வரலாம். முதுமைப் பருவத்தில் மனிதனுடைய ஐம்பொறிகளும் அதன் புலன்களை இழக்கத் தொடங்கும். ஆகவே, அவர்களுக்கு அன்றாட வேலைகளைச் செய்வதற்குப் பல சிரமங்கள், தடைகள் ஏற்படலாம்.

சிறுவர்களாகிய எம்மை எம் பெற்றோர்களும் குடும்பத்திலுள்ள பெரியவர்களும் தமது சிரமம் பாராது எமக்குத் தேவையானவற்றை கொடுத்துக் கண்ணும் கருத்துமாக வளர்க்கின்றார்கள். நாம் வாழ்வில் நல்ல நிலையை அடைய எமது குடும்பத்தினரும், எமக்கு அறிவு புகட்டும் ஆசிரியர் மற்றும் சமூகத்திலுள்ள பெரியவர்களுமே காரணமானவர்கள். ஆகையால், அவர்கள் முதுமை அடையும்பொழுது அவர்களுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்து, அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கவேண்டியது எமது தலையாய கடமையாகும்.

— அபிநயன் ஜெயகணேஷ்
ஆண்டு 8

# பாரதியார்



1882 இல் திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் பிறந்த பாரதி, தனது ஆரம்பக் கல்வியை திருநெல்வேலி மற்றும் வாரணாசி ஆகிய இடங்களில் பயின்றார். இவர் சுதேசமித்திரன், தி இந்து, பால பாரதா, விஜயா, சக்ரவர்த்தினி, மற்றும் இந்தியா உள்ளிட்ட பல இதழ்கள் மற்றும் செய்தித்தாள்களில் எழுதி வந்தார். பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாப்பா பாட்டு, பதஞ்சலி யோகசூத்திரம் (தமிழ் மொழிபெயர்ப்பு), பகவத் கீதை (தமிழ் மொழிபெயர்ப்பு), சின்னஞ்சிறு கிளியே, விநாயகர் நான்மணிமாலை, விடுதலை பாடல்கள் மற்றும் ஆத்திசூடி உள்ளிட்ட பல நூல்கள் மற்றும் பாடல்களை இயற்றியுள்ளார். இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமை ஆக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும்.

1908 ஆம் ஆண்டில், பிரித்தானிய அரசாங்கம் பாரதியைக் கைது செய்ய ஆணை பிறப்பித்ததால், இவர் பிரெஞ்சு கட்டுப்பாட்டில் இருந்த பாண்டிச்சேரியில் 1918 வரை ஏறத்தாழ பத்து ஆண்டுகள் வாழ்ந்தார். இவர் தினமும் உணவளிக்கும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை யானையால் தாக்கப்பட்ட பிறகு உடல் நலம் குன்றிய இவர், சில மாதங்களுக்குப் பிறகு 1921 செப்டம்பர் 11 அன்று அதிகாலை இறந்தார்.

அபிநயா இராமக்கிருஷ்ணன்
ஆண்டு -

# எனது சீனப்பயண அனுபவம்



விடுமுறையில் நான் எனது குடும்பத்துடன் ஒரு குறுகிய காலப் பயணமாகச் சீனாவுக்கு சென்றுருந்தேன். நாங்கள் பார்க்க விரும்பிய டெரக்கோட்டா போர்வீர்கள் (Terracotta Warriors) சியான் நகரின் (ஓை'யல) அருகில் இருந்ததால் சீனாவின் நடுவில் உள்ள சியான் என்ற நகரத்தில் நாங்கள் விமானத்தில் இருந்தும் இறங்கினோம்.

நாங்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து சீனாவுக்கு வரும்போது, ஒரு சீனர் கூட இல்லை, நாங்கள் நிறையப் பாதுகாப்புடன் செல்ல வேண்டியிருந்தது. விமான நிலையத்தில் உள்ள பல்கடை அங்காடியில் (shopping centre) பல வெளிநாட்டு நிறுவனங்கள் இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

## போக்குவரத்து

நாங்கள் விமான நிலையத்தை விட்டு வெளியேறியதும் “திதி“ (Didi) என்ற செயலி மூலம் நாங்கள் ஒரு காரை வாடகைக்கு எடுக்க வேண்டியிருந்தது. ஏனென்றால், சீனாவிலுள்ள வாடகைக்கார்களில் நான்கு பேர் மட்டுமே பயணம் செய்கிறார்கள். எனது குடும்பத்தில் ஐந்து பேர் உள்ளனர். குறிப்பாக கிராமப்புறங்களில் விடுமுறை முழுவதும் “திதி“யை பலமுறை பயன்படுத்த வேண்டியிருந்தது. பொதுப் போக்குவரத்தையும் பயன்படுத்தினோம். என் அப்பா மீண்டும் பயன்படுத்தக்கூடிய ரயில் அட்டையை வாங்க விரும்பினார், எனவே நாங்கள் புதிய சீட்டுகளை வாங்க வேண்டியதில்லை. வாங்க இடம் கிடைக்காததால், காவல்காரரிடம் கேட்டோம். கூகிள் டிரான்ஸ்லேட் (Google translate) மூலம் என் அப்பாவிடம் பேசினார். அவர் எங்களை ஒரு பயன்படுத்தக்கூடிய ரயில் அட்டை இயந்திரத்திற்கு அழைத்து சென்றார். அதன்பிறகு சீனாவில் ரயில்களை எளிதாக பயன்படுத்த முடிந்தது. நாங்கள் குவாஷான் (Huashan) மலைக்கு சென்றபோது அது வெகு தொலைவில் இருந்ததால், அதிவேக ரயிலைப் பயன்படுத்தினோம். இதற்கு சிறப்பான சீட்டுகள் வேண்டியிருந்ததால் ரயில் அட்டைகளை பயன்படுத்த முடியவில்லை. ரயில் மிக வேகமாகச் சென்றது. அதன் வேகம் ஒரு மணி நேரத்தில் 310கிமீ. எங்களின் மற்றொரு போக்குவரத்து பேருந்து. பல சுற்றுலாத்தலங்களில் அருகிலுள்ள ரயில் நிலையத்திற்கு செல்லும் இலவச பேருந்துகள் இருந்தன.

## சுடுமட்சிலைப் போர்வீரர்களும் குதிரைகளும் (Terracotta Warriors)

நாங்கள் டெரக்கோட்டா போர்வீர்ர்களைப்



# எனது சீனப்பயண அனுபவம்

பார்த்தோம். அவை உண்மையான மனிதர்களின் அளவிலான சுடுமட்சிலைச் சிற்பிகளாகும். சில வீரர்கள் இன்னும் வண்ண நிறத்திலிருக்கிறார்கள். அவை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு பின் ஒரு சீனர் அரசனால் செய்யப்பட்டது. அவருக்கு முன் சீனா பல சண்டை மாநிலங்களால் ஆனது. அவர் சீனாவை ஒரு நாடாக சேர்த்தார். அவர் இறந்தபோது பாதுகாப்பை விரும்பினார். டெரக்கோட்டா போர்வீரர்களுடன் அருகில் மிருகச் சிற்பங்களும், இறந்தவர்களும் உள்ளனர். ஆனால் சில மக்களுக்கு இந்த அரசனைப் பிடிக்கவில்லை. ஏனென்றால் அவர் சீனாவை ஒன்று சேர்ந்தபோது பல சீன கலாசாரங்கள் அழித்தன. இது சக்கரவர்த்தியை மறு வாழ்விலும் பாதுகாப்பதை நோகமாகக் கொண்டு கிமு. 210இல் அடக்கம் செய்யப்பட்ட ஒரு மரச்சடங்குக் கலையின் வடிவமாகும்.

## குவாஷான் (Huashan) மலை

நாங்கள் குவாஷான் மலைக்கு சென்றோம். அம் மலையில் ஐந்து உச்சிகள் உள்ளன. முதலில் வடக்கு உச்சியை ஏறினோம். மழை பெய்தது. உச்சயில் நாங்கள் ஒரு அழகான காட்சியை பார்த்தோம். பின்னர் நாங்கள் மத்திய சிகரம் ஏறினோம். நிறைய படிகள் இருந்தன! ஆனால் உச்சியில் ஒரு மிக சிறந்த காட்சியை பார்த்தோம். அதன்பின் நாங்கள் மேற்கு உச்சியில் ஏறினோம். மேற்கு உச்சியை நாங்கள் ஒரு கேபிள் காரில் (cable car) சென்று பார்த்த பின் மலையின் அடித்தளத்திற்கு சென்றோம்.

## உணவு

சீனர் உணவு மிகவும் சுவையானது. நாங்கள் சைவ உணவு மட்டுமே உண்கிறோம். ஆனால் பல உணவகங்களில் சைவ உணவு உண்டு. பௌத்தர் ஆலயத்தில் ஒரு சைவ உணவகம் இருக்கும்.

## வானிலை

நாங்கள் சீனாவில் இருந்தபோது கோடை காலம். மிகவும் சூடானது. பொதுவாகக் கோடை காலத்தில் அடிக்கடி மழை பெய்தது.

## மக்கள்

சீனாவில் அதிக சுற்றுலா பயணிகள் இல்லை. அத்துடன் எங்களைப் பார்த்துச் சீனர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டனர். அவர்களில் சிலர், எங்களை எங்கிருந்து வந்தீர்கள் என்று கேட்டார்கள். சிலர் புகைப்படம் எடுக்கலாமா என்று கேட்டார்கள்.

எனது சீனப் பயணம் மறக்க முடியாத அனுபவமாக இருந்தது.

**திவ்யா வரதன்,**
**ஆண்டு 8**



# தமிழ் உணவு, தமிழ் உணர்வு


நம் தமிழர்களுக்கு, உணவு எவ்வளவு இன்றியமை யானது! தமிழர்களுக்கு உணவு என்பது ஊட்டச்சத்துக்கான ஆதாரம் மட்டுமல்ல. அது வாழும் வாழ்க்கை முறையாகும். எந்த நிகழ்ச்சிக்கு சென்றாலும் வயிறு முழுவதும் விருந்தாலிகளை சாப்பிடவைத்து அனுப்புவது நம் பழக்கவழக்கங்களில் ஒன்று. இறுதிச் சடங்குகளில் கூட கல்யாண சாப்பாடு என்கிற சாப்பாடைப் போடுவோம்

தமிழர்களின் சாப்பாட்டில் பல விதமான வகை இருக்கின்றன. இதற்கான காரணம் வெவ்வேறு சமையல் பொருட்கள் மற்றும் தனித்துவமான சமையல் விதம். ஒவ்வொரு இடத்திற்கும் ஒரு சிறப்பு உண்டு. தோசையிலையே , சாதா தோசை , கல் தோசை , முட்டை தோசை, ரவை தோசை , ராகி தோசை என்ற விதங்கள் இருக்கின்றன. இட்லி முதல் பொங்கல் வரை எவ்வளவு உணவு விதங்கள் இருக்கின்றன. இந்தக் காரணங்களால் தமிழர்களுக்கு சாப்பாடு மிக முக்கியமானது.

உலகிலேயே மிகவும் ஆரோக்கியமான உணவுகளில் ஒன்று தமிழர்களுடையது. அது மட்டும் இல்லை, அது மிகவும் சுவையா-னது. பருப்பு, காய்கறிகள் மற்றும் குறைந்த நிறைவுற்ற கொழுப்புகள் போன்ற ஆரோக்கியமான பொருட்களைச் சேர்ப்பது தமிழ் உணவை ஆரோக்கியமாக்குகிறது. பல நாடுகளில், மக்கள் ஆரோக்கியமாக இருக்க மருந்து சாப்பிடுகிறார்கள், ஆனால் தமிழர்களுக்கு உணவே மருந்து!

தமிழ் உணவு மற்ற கலாச்சார உணவுகளிலிருந்து தனித்துவமானது. தமிழ் உணவு ஆரோக்கியமானது என்பது தனித்துவத்திற்கு ஒரு காரணம். உணவு சுவை யூட்டும் தமிழ் உணவை வேறுபடுத்துகிறது. தமிழ் உணவுகள் மற்ற கலாச்சாரங்களுடன் ஒப்பிடும் போது காரமானவை . இதனால் தமிழ் சாப்பாடு தமிழர்களுக்கு மிக அவசியமானது.

தமிழர் உணவு என்பது தமிழர்களுக்கு ஒரு உணர்வு என்றதனால் அது இன்றியமை யானது. இது பல்வேறு வகைகளைக் கொண்டுள்ளது, மற்ற கலாச்சாரத்திற்கு தனித்துவமானது, ஆரோக்கியமானது மற்றும் சுவையானது. நாம் உணவுடன் கொண்டாடுவோம், உணவையே கொண்டாடுவோம்!



# செல்வங்கள் அனைத்திலும் சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும்

கல்வியின் சிறப்பைப் பற்றியும் கல்வி தெய்வமான சரஸ்வதியைப் பற்றியும் உங்களுடன் என் எண்ணக் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன்.

உலகில் உள்ள செல்வங்கள் அனைத்திலும் சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும். கல்விச் செல்வமானது அழிவில்லாதது, கள்வரால் திருட முடியாது, தீயினால் எரிக்க முடியாதது. கல்வி என்றும் நிலைத்து நிற்கக்கூடியது.

மனிதர்களின் அறியாமையை போக்கி அறிவு ஒளி ஊட்டுவது கல்வி.

கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. கற்றறிந்தவனே கண்ணுடையவனெனக் கருதப்படுவான்.

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்” என்பது ஔவையார் வாக்கு.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கல்வி கற்க நல்ல நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும், அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும். இதனையே வள்ளுவரும்

“கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்கு தக” என்றார்.

அதாவது, கற்ற அறிவு நம் வாழ்க்கையில் நடைமுறை அறிவாக உருமாறி, அது நம் செயல்களில் பிரதிபலிக்க வேண்டும் என்பதையும்

அவர் கூறுகிறார்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்னும் முதுமொழியை நாம் மறக்கக் கூடாது. எல்லா வித அழகுகளிலும் ஒருவனுக்கு கல்வி அழகே சிறந்த அழகாகும்.

உதாரணமாக ஆஸ்திரேலியாவில் வாழும் எமது பெற்றோர்கள் அனைவருமே கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்தவர்கள். அதனாலேயே அவர்கள் எமது கல்வி மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். எம்மை சிறுவயதில் இருந்து தமிழ் பாடசாலைக்கு கிரமமாக அழைத்து வந்து எமது தாய் மொழியாம் தமிழ் மொழி ஆற்றலை பெருக்க அரும்பாடு படுகிறார்கள். அத்துடன் சங்கீதம் நடனம் மற்றும் இசைக்கருவிகள் பயில்வதற்கு எமக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்.

எந்தவொரு சமூகத்தின் வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருப்பது கல்வி அறிவே ஆகும். கல்வி என்பது அறிவு வளர்ச்சி மற்றும் நாகரிகத்தின் வெளிப்பாடு ஆகும். கல்வி நம் சிந்தனையை உயர்த்தி, நாகரிகத்தை வளர்க்க உதவுகிறது. கல்வி இன்றி மனிதனின் வளர்ச்சி பூரணமடையாது.

எமது தமிழ் மொழி, பக்தி இலக்கியங்களையும் தத்துவ சாஸ்திரங்களையும் புராண இதிகாசம் முதலானவற்றையும் நிரம்ப பெற்ற வளமான மொழியாகும்.

இவற்றைக் கற்று தெளிதல் நமது வாழ்வின் ஓர் அங்கமாகும். கல்வியின் பயன் உயர்ந்த தொழில்களையும் செல்வத்தையும் ஈட்டுவது மாத்திரம் அல்ல. பணிவையும், பிற உயர் பண்புகளையும் தராத கல்வியால் பயன் இல்லை. இறையுணர்வை ஏற்படுத்தாத கல்வியால் எந்த பயனும் இல்லை என்கிறார் திருவள்ளுவர்.

கற்றதனால் ஆய பயன் என் கோல், வாலறிவன்
நற்றால் தொழாஅர் எனின்?

இத்தகைய சிறப்பு மிக்க கல்வியை தரும் தெய்வமான சரஸ்வதியை வணங்குவது எம் தலையாய கடனாகும்.

"வெள்ளைத்தாமரைப்பூவில் இருப்பாள், வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்" என்று சரஸ்வதி தேவியை வருணித்து ஒரு பாடல் இருக்கிறது. அந்த இனிமையான பாட்டில் பாரதியார், சரஸ்வதி தேவி மீது வைத்திருக்கும் அன்பை விவரிக்கிறார். சரஸ்வதி, கலைகளில் வல்லவர் என்பதால், கலைமகள் என்று பெயர் பெற்றார்.

சரஸ்வதி தேவி தனது கைகளில் வீணை, புத்தகம், முத்துமாலை, மற்றும் வீணை தாங்கி நிற்கிறார். வீணை கலைகளையும் இசையையும் குறிக்க, புத்தகம் அறிவையும் கல்வியையும் பிரதிபலிக்கிறது. முத்துமாலை ஆன்மிகத்தைச் சித்தரிக்கிறது. மற்றும் மீட்டுக் கொண்டிருக்கும் வீணை மாணவர்களாகிய நாம் கற்ற கல்வியை எப்பொழுதும் மீட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்ற

"வெண்தாமரைக்கு அன்றி நின்பதம் தாங்கஎன் வெள்ளையுள்ளத்து" என்று சகலகலாவல்லி மாலையில் சுவாமி குமரகுருபரர் பாடியுள்ளார்.

சரஸ்வதி தேவி வெள்ளை சேலை அணிந்து, வெள்ளை தாமரையில், வெள்ளை அன்னத்துடன் அமர்ந்திருக்கின்றார். அதாவது தூய்மையான இடத்தில் மட்டுமே சரஸ்வதி அன்னை குடியிருப்பார். எனவே மாணவர்களாகிய நாங்களும் உள்ளத்தூய்மையுடன் தேவியை வழிபட்டு தேவியின் அருளை பெறுவோம்.

**சிவசொரூபினி சிவகுமார்**
( ஆண்டு 11, 2024)





# ஆஸ்திரேலியாவில் ஆபரிஜினல் மக்களின் முக்கியத்துவம்

ஆஸ்திரேலியாவின் பண்பாட்டு மரபில் ஆபரிஜினல் மக்கள் ஒரு அடிப்படையான பங்கு வகிக்கின்றனர். அவர்கள் இந்த நாட்டின் முதல் குடியேற்றக்காரர்கள், சுமார் 65,000 ஆண்டுகளுக்கு முன்னரே இங்கே வாழ்ந்தவர்கள். இந்நாட்டின் உழவு, வழிபாட்டு முறை மற்றும் சமூக அமைப்புகளை உருவாக்கியவர்கள் அவர்கள்.

இதனால், அவர்களின் மொழிகள், கலை, இசை மற்றும் கதைப்பாடு போன்ற பண்புகளை பாதுகாக்கும் முயற்சிகள் மிக முக்கியமாகும். ஆபரிஜினல் மக்கள் அதிகபட்சமாக இயற்கை மற்றும் சுற்றுச்சூழலை மதிக்கின்றனர். அவர்கள் நிலம், நீர் மற்றும் வனத்தோடு உள்ள உறவைப் புரிந்து கொண்டுள்ளனர். இந்தக் கருத்து, எதிர்கால பராமரிப்புக்கும், நிலைபாதுகாப்புக்கும் மிக முக்கியமானதாக அமைந்துள்ளது. ஆபரிஜினல் கலை மற்றும் பாரம்பரியங்கள், சுற்றுச்சூழலுக்கு ஏற்ப ஒரு சுய விருத்தி அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. கலாச்சார அடையாளத்தைப் பாதுகாப்பதற்கு, ஆபரிஜினல் மக்கள் ஆஸ்திரேலிய சமூகத்தில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

அவர்களின் பன்முகத்தன்மை, இதன் பண்பாட்டு மிகுதிக்காக அத்தியாவசியமாகும். அவர்கள் வழங்கும் பாரம்பரிய கலை, சரித்திரம் மற்றும் மொழிகள், ஆஸ்திரேலியாவின் அடையாளம் மற்றும் வரலாற்றின் முக்கிய கூறுகளாக விளங்குகின்றன. மேலும், ஆபரிஜினல் மக்களின் சமூக நலன் முக்கியமாகும். அவர்கள் கல்வி, சுகாதாரம் மற்றும் வேலை வாய்ப்பு ஆகிய துறை களில் பல சவால்களை சந்திக்கின்றனர். இவை குறைக்கப்பட வேண்டும் இதற்காக சமூக மற்றும் அரசி யல் நடவடிக்கைகள் அவசியமாக உள்ளன. ஆபரிஜினல் மக்களின் நலனுக்கு முன் வந்தால், அதுவே முழு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு உதவும். இது அவசியமாகவே, ஆபரிஜினல் மக்களின் கலாச்சாரம் மற்றும் மரபுகளை மதித்து, அவர்களை சீர்செய்யும் பணி தொடர வேண்டும். அவர்களின் மரபுகளை காக்கும் முயற்சிகள், எதிர்கால தலைமுறைகளுக்கு ஒரு வலிமையான அடிப்படையை உருவாக்கும். ஆகவே, ஆஸ்திரேலியாவில் ஆபரிஜினல் மக்களின் முக்கியத்துவத்தை நாம் மறக்க கூடாது.

**திலன் தியாகராஜா**
**ஆண்டு 11**

# வீரம் என்பது

மலைமகள், அலைமகள், கலைமகள் வணக்கத்துக்குரிய இந்த நவராத்திரி காலத்திலே மலைமகள் ஆகிய துர்க்கையை அம்மனைப் பற்றி அறிந்து கொள்வது பொருத்தமானதாகும்.

துர்கா தேவி பல கரங்களைக் கொண்ட ஒரு சக்திவாய்ந்த, பிரகாசமான தெய்வமாக இங்கே காட்சியளிக்கின்றார். அவருடைய கைகளில் வாள், திரிசூலம், வில் மற்றும் கதாயுதம் போன்ற ஆயுதங்களை வைத்திருக்கிறார். துர்க்கை பல அசுரர்களை வதம் செய்திருக்கிறார் என்பது நாம் அறிந்ததே. வீரத்தின் தெய்வமாக விளங்கும் துர்கை, சிங்கத்தை வாகனமாக கொண்டிருக்கிறார்.

அம்மனின் சிவப்பு நிற புடவை தைரியத்தையும், பகைவரை அழிக்கும் தன்மையையும் குறிக்கிறது. துர்க்கையின் இந்த தோற்றம் அமைதியானது, ஆனால் கடுமையானது, கருணை மற்றும் உறுதிப்பாடு இரண்டையும் உள்ளடக்கியது. சிவபெருமானின் சக்தியாகிய துர்க்கை மூன்று கண்களை உடையவர். அவரது மூன்றாவது கண், ஆன்மீக நுண்ணறிவு மற்றும் பொருள் உலகத்திற்கு அப்பால் பார்க்கும் திறனைக் குறிக்கிறது.

தமிழ் மரபில், வீரம் என்பது உடல் வலிமை மட்டுமல்ல, அன்பு, துணிவு, பொறுப்பு, மற்றும் பாதுகாப்பு. தமிழ் வீரர்கள் தங்கள் மொழி, நிலம் மற்றும் மக்களைப் பாதுகாப்பதற்காக துர்க்கையைத் தங்கள் குலதெய்வமாக வணங்கினார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, வீரம் என்பது நமது வரலாற்றில் ஆழமாக வேரூன்றியுள்ளது.





தமிழ் இதிகாசங்களும் சங்க இலக்கியங்களும் துணிச்சலான வீரர்களை கௌரவிக்கின்றன. அவர்கள் புகழுக்காக மட்டும் போராடவில்லை, தங்கள் நிலம், மொழி மற்றும் சமூகங்கள் மீது கொண்ட அளவற்ற பற்றினால் பாதுகாக்கவும், நீதியை நிலைநாட்டவும் போராடினார்கள். அசுரர்களை வதம் செய்து மக்களைக் காத்து அறத்தை நிலைநாட்டும் துர்க்கை அம்மனின் தன்மை தமிழ்ப் பண்பாட்டுக்குள் வலுவாக எதிரொலிக்கின்றது.

முற்காலத்தில் இதனை சோழ வம்சத்தின் சக்கரவர்த்தி இராஜராஜ சோழனின் ஆட்சியில் பார்க்கலாம். இராஜ ராஜ சோழன் தரைப்படை மற்றும் கடற்படைகளைக் கொண்டு, சோழ நாட்டை, பாரதத்தில் இருந்து கடாரம் வரை ஒரு குடையின் கீழ் ஆண்ட வீரம் மிக்க தமிழ் மன்னன் என்பது பெருமைபடக்கூடிய ஒன்று.

தற்காலத்தில் கடற்படை, தரைப்படை மற்றும் விமானப்படை கொண்டு தமிழ் மொழியையும், மண்ணையும், மக்களையும் காத்த தமிழ் ஈழத்து மக்களின் மனம் கவர்ந்த தலைவரின் வீரமும் ஒப்பற்றது.

துர்கா தேவியின் வீர அருள் ஆட்சியையும் எமது முன்னோர்களின் வீரத்தையும் பண்பாட்டையும் பற்றி அறிந்து கொண்ட நாங்கள், அறத்துடனும் தளராத மனதுடனும் வீரமாக எங்கள் இலக்கை நோக்கி வீறு நடை போட்டு வாழ்வோம்.

இதனையே திருவள்ளுவர்:
பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.
என்று கூறியுள்ளார்.

இதன் பொருள், பகைவர்க்கு அஞ்சாத வீரம் பெரும் ஆண்மை என்று போற்றப்படும். அந்தப் பகைவர்க்கு ஒரு துன்பம் வரும்போது அதைத் தீர்க்க உதவிடுவது ஆண்மையின் உச்சம் எனப் புகழப்படும். என்னுடைய கருத்தை வாசித்து மகி ழ்ந்த அனைவரும் மலைமகள் அருள் கிடைக்க வேண்டுகின்றேன்.

**சிவலிங்கேசர் சிவக்குமார்**
**(ஆண்டு 11, 2024)**

# சிலப்பதிகார மாநாடு 2024



## ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலைய வாணி விழா







# ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலைய வாணி விழா














ஓடிடும் தமிழா நில், நீ ஒரு கணம் மனதைத்தட்டு
வீடு நின்னூருள் சொந்தம், விளைநிலம் நாடு விட்டாய்
தேடியதெல்லாம் விட்டுத்திசைபல செல்லும் வேளை
பாடிய தமிழை மட்டும் பாதையில் விட்டிடாதே
ஓர்தலைமுறையின் பின்னே உன்னடி உறவென்றேனும்
ஊரிலே அறியாப்பிள்ளை உலகரங்கினில் யாரோ
தாரணி மீதில் நானோர் தமிழனென்றுறுதி செய்யின்
ஊர்பெயர் உடைகள் அல்ல ஒண்டமிழ் மொழியே சாட்சி

சாட்சியாய் அமையுஞ் சொந்தச் செந்தமிழ்
மொழியே முன்னோர்
ஈட்டிய செல்வம் எங்கள் இனவழிச் சீட்டாம்
ஏந்த நாட்டிலே வாழ்ந்தபோதும் நடைமுறைவாழ்வில் என்றும்
வீட்டிலே தமிழைப்பேணும் விதிசெயல் கடமை ஐய !
வீட்டிலே தமிழைப்பேசும் விதி செயல் கடமை ஆமாம்
பாட்டனாய் வந்து பேரன் பரம்பரை திரிதல் கண்டே
ஈட்டிய செல்வம் போச்சே, இனவழி போச்சே என்று
வாட்டு நெஞ்சுணர்வை வெல்ல வழி பிறிதொன்றுமில்லை.



## கவிஞர் அம்பி

**(17 பெப்ரவரி 1929 –
27 ஏப்ரல் 2024)**



# தமிழ்க் கதிர்

**ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தினால் வெளியிடப்படும்**

**மாணவர் சஞ்சிகை மின்னிதழை பார்வையிட ஸ்கேன் செய்யுங்கள்**